# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, யூன் மாதம் 17 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 13.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

**2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம்**

[2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.- ஓ. 52/2004

**சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் என அழைக்கப்படும் மன்றமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2005 ஆண்டின் 19 ஆம் இலக்க, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

பாகம் I

**சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தினைத் தாபித்தல்**

**2.** (1) காலஞ்சென்ற திரு. சௌமியமூர்த்தி தொண்டமானின் ஞாபகத்தை நினைவுகூரச் செய்வதற்கு "சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகாரத்த மன்றம்" என அழைக்கப்பட வேண்டியதான மன்றமொன்று தாபிக்கப்படல் வேண்டும் (இது இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்). சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தினைத் தாபித்தல்.

(2) மன்றமானது (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக் கப்பட்ட பெயரால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயரால் அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

**3.** (1) மன்றமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மன்றத்தின் முகாமைச் சபை.

2 – PL 000201 – 1,250 (2005/ 03)

(அ) பெருந்தோட்ட உள்ளகக் கட்டமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ;

(ஆ) எதிர்க்கட்சித் தலைவர் ;

(இ) திரு. ஆறுமுகம் தொண்டமான் அவரது சீவிய காலத்தின்போது ; அதன் பின்னர் காலஞ்சென்ற திரு. சௌமியமூர்த்தி தொண்டமானின் உயிர்வாழும் மூத்த வாரிசு :

ஆயினும், எவ்வாறாயினும் திரு. ஆறுமுகம் தொண்டமான் ஏதேனும் காலப்பகுதிக்கு சபையின் பதவிநிலை உறுப்பினரொருவராகவரின், காலஞ்சென்ற திரு. சௌமியமூர்த்தி தொண்டமானின் உயிர்வாழும் மூத்த வாரிசு அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் உறுப்பினரொருவராக சேவைபுரிதல் வேண்டும் ;

ஆயினும், மேலும் உயிர்வாழும் மூத்த வாரிசு சபையின் உறுப்பினரொருவராகச் சேவையாற்ற விரும்பாத அல்லது இயலாத பட்சத்தில், உயிர்வாழும் அடுத்த மூத்தவாரிசு சபையின் உறுப்பினரொருவராக சேவையாற்றுதல் வேண்டும் ;

(ஈ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ; அல்லது அவரது பிரதிநிதி ;

(உ) பெருந்தோட்ட உள்ளகக் கட்டமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கான செயலாளர் ; அல்லது அவரது பிரதிநிதி ;

(ஊ) இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(எ) சமூகத்தின் வாழ்க்கை நிலைமை, கலாசார மற்றும் சமுதாய அபிவிருத்தி என்பவற்றைத் தரமுயர்த்துவதற்கு அர்ப்பணிப்பும் ஈடுபாடும் உள்ளவர்களாக ஏற்று அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அல்லது திறமை யான ஆட்களிடையேயிருந்து திரு. ஆறுமுகம் தொண்டமானினால் அவருடைய சீவியகாலத்தின் போது மற்றும் அதன் பின்னர் சபையால் நியமிக்கப் பட்ட ஆட்கள் இருவர்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அதன் சார்பில் சபைக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட ஒரு கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து விலகலாம் ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ஏதேனும் நேரத்தில் குறித் தொதுக்கப்பட்ட காரணங்களுக்காக சபையால் பதவியிலிருந்து அகற்றப்படலாம் ;

(இ) இவ்வுட்பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக்காலம் அவருடைய நியமனத்தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டும் ;

(ஈ) ஓராம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் நியமிக் கப்பட்டவரும் காலம் கழிவதன்மூலம் பதவியை வறிதாக்குகின்ற வருமான உறுப்பினரொருவர், மீள்நியமனத்திற்கு தகுதியுடைய வராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ), (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்படும் உறுப்பினரொருவர், எந்தப் பதவியின் பயனைக்கொண்டு அவர் சபையின் உறுப்பினரொருவ ராக இருக்கின்றாரோ அத்தகைய உறுப்பினர் அந்தப் பதவியை வகிக்கின்றவரை பதவி வகித்தல் வேண்டும்.

(4) அமைச்சரே சபையின் தவிசாளராதல் வேண்டும், அத்துடன் சபையின் ஏதேனும் கூட்டத்தில் அமைச்சர் சமுக மாயில்லாதபோது, அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் தங்களிடையேயிருந்து அக்கூட்டத்திற்கான தவிசாளர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(5) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(6) சபையானது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலும் நடபடிமுறை ஒழுங்குபடுத்தலாம்.

(7) சபையானது, அதனுடைய உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் உள்ள குறைபாடு எது எப்படியிருப்பினும் செயலாற்றலாம்.

மன்றத்தின் இலச்சினை.

**4.** மன்றத்தின் இலச்சினையானது -

(அ) சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளில் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ;

(இ) சபையின் அனுமதியுடனும் சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலுமன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக கையொப்பமிடுதல் வேண்டும்.

மன்றத்தின் குறிக்கோள்கள்.

**5.** மன்றத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) இலங்கையின் சகல சமுதாயங்களுக்கிடையேயும் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தல் ;

(ஆ) வெவ்வேறு இனங்களுக்கிடையேயான சுமுக உறவையும் சமூக ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும் ;

(இ) இலங்கையர்களின் சமய, கல்வி, வாழ்க்கைத்தொழில், சமூக, அரசியல், பொருளாதார, அழகியல்சார் மற்றும் பௌதீக அபிவிருத்தியை மேம்படுத்துதல் ;

(ஈ) பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார சமூக மற்றும் அழகியல்சார் துறைகளில் இலங்கையர்களின் அறிவையும் புரிந்துணர்வையும் அதிகரித்தல் ;

(உ) பொருளாதாரரீதியாகவும் சமூகரீதியாகவும் வசதி குறைந்த ஆட்களின் வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுதல், இது அவர்களுக்கான உறைவிடம் மற்றும் வேறு உள்ளகக் கட்டமைப்பு வசதிகளின் ஏதேனும் முன்னேற்றுதலையும் உள்ளடக்குகின்றது ;

(ஊ) தோதான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு இலங்கையர்களை ஊக்குவித்தல் ;

(எ) மன்றத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள் களைக்கொண்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனான உறவைத் தாபித்தல் ;

(ஏ) மன்றத்தின் ஏதேனும் குறிக்கோள்களுடன் ஒத்ததான ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளுக்கு நிதியுதவியளித்தல் அல்லது வேறு உதவியளித்தல் ;

(ஐ) பொருளாதார, அரசியல், கல்வி, கலாசார மற்றும் சமூகத்துறைகளில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் ;

(ஒ) மனித உரிமைகள், கடமைகள், நீதியை அணுகுதல் முதலியவற்றின்மீது இலங்கையர்களுக்கிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்கான திட்டங்களை ஒழுங்கமைத்தல் ;

(ஓ) இலங்கையர்களின் விளையாட்டு மற்றும் பொழுது போக்குத் திறமைகளை முன்னேற்றுவதற்குப் போது மான வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஔ) மன்றத்தின் குறிக்கோள்களை எய்தப் பெறுவதற் காகவும் தகுதியானதென சபை கருதக்கூடியவாறான வேறு ஏதேனும் நோக்கத்திற்காகவும் றம்பொடவில் அமைந்துள்ள "தொண்டமான் கலாசார நிலையம்" நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளை யாட்டுக் கட்டிடத்தொகுதி, ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிலையம், என்பவற்றை பராமரித்தலும் பயன்படுத்தலும் :

ஆயினும், எவ்வாறாயினும் றம்பொடவில் அமைந் துள்ள தொண்டமான் கலாசார நிலையம், நோர்வூட் டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிலையம் என்பன ஏதேனும் அரசியல் நோக்கத்திற்குப் பயன் படுத்தப்படுதலாகாது ;

(க) மேற்கூறப்பட்ட குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

மன்றத்தின் தத்துவங்களும் பணிகளும்.

**6.** (1) சபையானது, மன்றத்தின் பெயரில் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலங்களில் இருந்து பணமாகவோ அல்லது பொருளாகவோ மானியங்களை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல் ;

(ஆ) கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாகக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல் அத்துடன் அவற்றை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்கு விடல், வாடகைக்குக் கொடுத்தல், மானியக்கொடையளித்தல், உரித்து மாற்றுதல், மரணசாதனக் கொடையளித்தல், குறித்தொதுக்குதல், கொடுத்து மாற்றுதல் அல்லது வேறு வகையில் பரிமாற்றுதலும் கையுதிர்த்தலும் ;

(இ) பொருளாதார, கல்விசார், கலாசார, சமூக, அழகியல்சார் அத்துடன் விளையாட்டு அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மானியக்கொடையளித்தல், அறக்கொடை வழங்கல் அல்லது புலமைப்பரிசில்களை வழங்கல் ;

(ஈ) மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக சபையினால் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீதான கடன்களைப் பெறுதல் ;

(உ) மன்றத்தின் தத்துவங்களையும், பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், ஆற்றுவதற்கும் புரிவதற்கும் அத்துடன் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும், ஒன்றில் நேரடியாகவோ அல்லது அதன்

சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட மன்றத்தின் அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது முகவர்கள் மூலம் செய்துகொள்ளுதலும், நிறைவேற்றுதலும் ;

(ஊ) மன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைகள் அல்லது வசதிகளுக்கான கட்டணங்களை விதித்தல் ;

(எ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தலும் தொழிலுக்கு அமர்த்துதலும் அவர்களுக்கான ஊதியத்தை வழங்குதலும் அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகிப்பதும் அவர்களை தொழிலில் இருந்து நீக்குதலும் ;

(ஏ) றம்பொடவில் அமைந்துள்ள தொண்டமான் கலாசார நிலையம், நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, மற்றும் ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிலையம் என்பவற்றை முகாமை செய்தலும் பராமரித்தலும் அத்துடன் அத்தகைய நிலையங்களை அல்லது அதன் ஏதேனும் பகுதிகளைப் பொது மக்களின் பார்வையிடலுக்காக அல்லது பயன்படுத்துதலுக்காக விதிப்பனவுகளை அறவிடுதலும் ;

(ஐ) மன்றத்திற்கு சொந்தமான நிதியத்தை, முதலீடு செய்வதற்கான சட்டத்தின்மூலம் அதிகாரமளிக்கப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய முதலீடுகளில் சபையின் தற்றுணிபின்படி அத்தகைய பணத்தினை முதலீடு செய்தலும், அத்துடன் அத்தகைய முதலீட்டை மீளப் பெறுதலும், மீள முதலீடு செய்தலும் மற்றும் வேறுபடுத்துதலும் அத்துடன் அத்தகைய முதலீட்டிலிருந்து திரண்ட வருமானத்தைச் சேகரித்தலும் ;

(ஒ) குறிக்கோள்களை எய்துவதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் மன்றத்துக்குத் துணைபுரிவதற்காக குழுக்களை நியமித்தல் ;

(ஓ) மன்றத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமான அல்லது அதன் இடைநேர்விளைவான எல்லா விடயங்களையும் செய்தலும்.

குறித்த சில ஒப்பந்தங்களின் நோக்கத்திற்காக மன்றத்திற்கான சேவையானது அரசாங்கத் திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**7.** குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவை செய்வதாக உடன்பட்டு, அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டவரான ஆளெவரையும் மன்றம் தொழிலுக்கு அமர்த்தியுள்ளவிடத்து, அந்த ஆளினால் மன்றத்திற்கு ஆற்றப்படும் சேவைக்காலப்பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

மன்றத்தின் பணியாட் தொகுதி.

**8.** (1) சபையானது, காலத்திற்குக்காலம் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள்மீது அதனுடைய பணிகளை திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.

(2) சபையின் வேண்டுகோளின்பேரில் எவரேனும் பகிரங்க அலுவலர், அவ்வலுவலரின் சம்மதத்துடனும் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரின் சம்மதத்துடனும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலரெவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலரெவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அசைவற்ற அரச காணி மன்றத்திற்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.

**9.** அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் மன்றத்தின் நோக்கத்திற்குத் தேவைப்படுமிடத்து, அத்தகைய ஆதனம் (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எந்த நோக்கத்துக்காக விசேட மானியக்கொடை அல்லது குத்தகை ஆக்கப்படக்கூடுமோ அந்த நோக்கம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மன்றத்திற்கான அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை ஒன்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் II

### *நிதி*

மன்றத்தின் நிதயம்.

**10.** (1) "சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற நிதியம் " என அழைக்கப்படும் நிதியம் ஒன்று தாபிக்கப்படல் வேண்டும். (இது இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) ஏற்கனவே செலவிடப்பட்ட எழுபத்திரெண்டு மில்லியன் ரூபா நிதியத்தின் தொடக்க மூலதனமாக இருத்தல் வேண்டும். இது றம்பொடவில் அமைந்துள்ள தொண்டமான் கலாசார நிலையம், நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டுக் கட்டிடத்தொகுதி மற்றும் ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் வாழ்க்கை தொழிற்பயிற்சி நிலையம் என்பவற்றை நிறுவுவதற்காக இலங்கையின் திரண்ட நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட தொகையிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன மன்றத்தின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) மன்றமானது இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைப் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் அத்துடன் புரிகையிலும் அதனால் பெற்றுக்கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய ஏதேனும் பணத்தொகை ;

(ஆ) இலங்கையிலிருந்தாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்தாயினுஞ்சரி நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்பனவாயிலாக மன்றத்தினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) மன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைகளுக்காக அல்லது வசதிகளுக்காக கட்டணங்களை அறவீடு செய்வதிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் ;

(ஈ) றம்பொடவில் அமைந்துள்ள தொண்டமான் கலாசார நிலையம், நோர்வூட்டில் அமைந்துள்ள தொண்டமான் விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, மற்றும் ஹட்டனில் அமைந்துள்ள தொண்டமான் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையத்தினை அல்லது அதன் ஏதேனும் பாகத்தினை பொதுமக்கள் பார்வையிடுவதற்கும் அத்துடன் அதனைப் பயன்படுத்துவதற்குமான விதிப்பனவுகளை அறவிடுவதிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் ; அத்துடன்

(உ) மன்றத்திற்கு கொடுக்குமதியான ஏதேனும் வருமான முதலீடுகள் அல்லது வேறு பெறுகைகள்.

(4) மன்றமானது இச்சட்டத்தின்கீழ் அதனுடைய தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**11.** (1) சபையானது ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் நாளன்று அதனுடைய கணக்குப் புத்தகங்களை சமப்படுத்தச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன், அடுத்து பின்வரும் பெப்புருவரி கடைசி நாளைப் பிந்தாமல், மேற்சொல்லப்பட்ட தேதி வரையிலான சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சுருக்கவிளக்கத்தினைக் கொண்டுள்ள இலாப நட்டக்கணக்கு மற்றும் ஐந்தொகையையும் தயாரித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய கணக்குகள் மற்றும் ஐந்தொகையினை தயாரிப்பதற்காக பொறுப்பான அலுவலரினால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் மன்றத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.

**12.** மன்றமானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 2000 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப் பட்டிருக்கின்றதான அத்தகைய அளவிற்கு மன்றத்தின் வருமானம் அல்லது இலாபங்கள் மீதான ஏதேனும் வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிப்படுதல் வேண்டும். — வரிக் கொடுப்பனவில் இருந்து மன்றத்திற்கு விலக்களித்தல்.

## பாகம் III

## பொது

**13.** அமைச்சர் இச்சட்டத்தின் கீழான தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றி காலத்துக்குக் காலம் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளை எழுத்தில் சபைக்கு விடுக்கலாம். — பணிப்புக்கள்.

**14.** சபையானது, ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஆறு மாத காலப்பகுதியொன்றினுள், அமைச்சருக்கு அவ்வாண்டு காலப்பகுதியின் போது மன்றத்தின் செயற்பாட்டுக்கான முழுக்கணக்கையும் கொடுக்கின்ற அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அமைச்சர், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் முடிவிற்கு முன்னர் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படச் செய்வித்தலும் வேண்டும். — சபையினது அறிக்கை பாராளுமன்றத் தின் முன்னர் இடப்படுதல்.

**15.** இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட, மன்றமானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள் கொள்ளப்படலும் வேண்டும். — இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட மன்றமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்.

சபையின் உறுப்பினர்கள் மற்றும் மன்றத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**16.** சபையின் எல்லா உறுப்பினர்களும் மன்றத்தின் பணியாட்டொகுதியும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வழக்குக்கான பாதுகாப்பு.

**17.** (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும், இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்காக அல்லது சபையின் பணிப்பின்மீது சபையின் உறுப்பினர், மன்றத்தின் அலுவலர் அலலது சேவையாளர் எவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாக கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக அமைதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் மன்றத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் மன்றத்தினால் உறப்படும் செலவெதுவும் மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் மன்றத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது மன்றத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் மன்றத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின் அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**18.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சபையானது, பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்களுக்காகவும் அத்துடன் அவ் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம் :— விதிகள்.

(அ) மன்றத்தின் அலுவலர்களினதும் சேவையாளர் களினதும் ஊதியம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப் பாடு, அவர்களுக்கான லீவு வழங்கல் மற்றும் வேறு நன்மைகள் உட்பட சேவை நியதி நிபந்தனைகள் ;

(ஆ) மன்றத்தின் பணியாட்டொகுதியினை ஆட்சேர்க்கும் செயற்றிட்டம், நியமன நடவடிக்கைமுறை மற்றும் பதவியுயர்வு ;

(இ) மன்றத்தின் ஆண்டு நிகழ்ச்சித்திட்டம், வேலைத்திட்டம், ஆண்டு வரவு செலவுத்திட்டம், ஆண்டறிக்கை, மற்றும் கணக்குகள் அத்துடன் எந்த முறையில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டம், வேலைத்திட்டம், வரவு செலவுத் திட்டம், அறிக்கை மற்றும் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டுமோ அந்த முறை ; அத்துடன்

(ஈ) எந்த கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அத்தகைய வேறு கருமங்கள்.

(2) சபையினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதியிற் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பொருள் கோடல்.

**20.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு" என்பது, (138 ஆம் அத்தியாயமான) தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கம் ஒன்று எனப் பொருள்படும்.

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்பவற்றையும் அத்தகைய சபை அல்லது சபையினால் பிரயோகிக்கப்பட, புரியப் பட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களை, கடமை களை மற்றும் பணிகளை நேரொத்த அல்லது அதே போன்ற தத்துவங்கள் கடமைகள், மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபை எனப் பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*